உறுப்பினர் செயலர் (பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்

அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை. திரு. அ. விஜயன், பி.இ.,

ந.க.எண். 66/2018 சேஉதிகு நாள். 03.05.2018.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017– சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டக்கவுண்டம்பட்டி ஊராட்சி/கிராமம், ச.எண்.86/6Aபா – 0.95 ஏக்கர் (3844.51 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. மனுதாரர் திரு.ராம[illegible]தன், சேலம் அவர்களின் ஆன்லைன் விண்ணப்பம் நாள். 16.12.2017

****************

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 4–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கபபடுகிறது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டக்கவுண்டம்பட்டி ஊராட்சி/கிராமம், ச.எண்.86/6Aபா 0.95 ஏக்கர் (3844.51 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **மகாலட்சுமி அசோசியேட்ஸ்** அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு <u>ம.வ(வரன்முறை)/சேஉதிகு எண்.75/2018</u> என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 0.95 ஏக்கர் (3844.51 ச.மீ) |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 03 |
| விற்கப்பட்ட மனை எண். | : | (மனை எண். 1, 2, 7) |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 10 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | (3 to 6, 8 to 13) |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : | 1898.92 ச.மீ |

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு

| | | |
|---|---|---|
| பூங்கா (மனை எண். 6) | : | 228.54 ச.மீ (12.03%) |

..2..

R. Rajan

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்

1) பரிசீலனை கட்டணம்

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/–வீதம் 10 மனைகளுக்கு ரூ.5,000/- செலுத்தப் பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதள வாயிலாக செலுத்த வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :

| மனை எண். | பரப்பளவு (சமீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய்.25/– வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வன்முறைப்படுத்த அனுமதிவிக்கப்படுகிறது. | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு :

| | |
|---|---|
| HOD-CODE 26-02<br>0217 Urban Development 60 Other Urban Development Schemes –<br>800 Other Receipts AT Receipts under Regularisation charges of unapproved Layouts and plots – DTCP<br>(DPC : 0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.



K. Radha

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்.

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

**பெறுநர்,**
வட்டார வளர்ச்சி அலுவலர் / தனி அலுவலர்,
ஓமலூர்,
கோட்டக்கவுண்டம்பட்டி ஊராட்சி/கிராமம்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

**நகல்**

1. திரு. ராஜாராம்,
129/6A, 11வது கிராஸ் 2வது மெயின் ரோடு,
ரெட்டியூர், சிவாய நகர், பேர்லேண்ட்ஸ்,
சேலம்.

2. உதவி இயக்குநர் (நில அளவை),
மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலக வளாகம், சேலம்.
— சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு

3. சார்பதிவாளர்,
ஓமலூர்,
சேலம் மாவட்டம்.
— சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

ஓமலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை.திரு.எம்.ராஜா.பி.ஏ.,

ந.க. எண்.2468/2020 /தி5 நாள் : .06.2021

பொருள்: மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் – சேலம் உள்ளூர் திட்டக்குழுமம், - ஊராட்சி ஒன்றியம் ஓமலூர் - கோட்டகவுண்டம்பட்டி கிராமம் ச.எண்.86 / 6A –ல் அமைந்துள்ள 0.95 ஏக்கர் (3844.51 ச.மீ) பரப்பளவு கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளுக்கு கொள்கை அளவிலான குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. வீராமநாதன், 129/6A 11வது கிராஸ் இரண்டாவது மெயின் சிவாய நகர் ரெட்டியூர் பேர்லேண்ட்ஸ் சேலம் என்பவரின் விண்ணப்பம் நாள். 23.04.2021.
2. அரசாணை (நிலை)எண்.78,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி(நவ4(3)) துறை நாள்.04.05.2017.
3. அரசாணை(நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வவர்ச்சி(நவ.4(3)) துறை நாள்.13.10.2017.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண்.13193/2017/LA2 நாள்.30.10.2017, 31.10.2017,07.11.2017, மற்றும் 20.12.2017.
5. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம் சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.66/2017/சேஉதிகு, நாள்.01.02.2018.
6. இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.2051/2018/தி1 நாள்.23.05.2018.

(((0)))

__உத்திரவு :__

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டக்கவுண்டம்பட்டி கிராமம் ச.எண்.ச.எண்.86/6A –ல் அமைந்துள்ள 3844.51 ஏக்கர் பரப்பளவு கொண்ட மகாலட்சுமி அசோசியேட்ஸ் என்ற பெயரில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளுக்கான கொள்கை அளவிலான குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் (ம.வ /ம(சே)எண் 75/ 2018) என எண்ணிட்டு பார்வை 4-ல் காணும் உத்தரவில் கொள்கை அளவிலான ஒப்புதல் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை -3ல் காணும் உத்தரவின்படி உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய மனைப்பிரிவு சாலைகள் மற்றும் விற்கப்படாத மனைகளின் பரப்பளவில் 10 % பொது ஒதுக்கீடு (OSR) நிலங்கள் சாலைகள் ஆகியவை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

கீழ்காணும் விபரப்படி மனை வரன்முறைபடுத்த உரிய கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டண செலுத்திய விபரம் | தொகை ரூபாய் | விபரம் |
|---|---|---|---|
| 1 | பரிசீலனை கட்டணம்(10மனைகள்) | 5000 | ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளது. (Online Receipt) |
| 2 | வரன்முறை கட்டணம் (9 மனைகள்) | 50253 | Govt. Head Chalan No.19/23.05.18 SBI Salem District, Treasury Salem |
| 3 | வளர்ச்சி கட்டணம் (9 மனைகள்) | 41878 | D.DNo. 702571 Dt:12.05.18 Drawn on SBI Salem. |

மேற்கண்டவற்றின் அடிப்படையில் கீழ்காணும் விபரப்படி மனை எண்.3 முதல் 5 வரை 8 முதல் 13 வரை ஆகிய 9 மனைகள் வரன்முறைசெய்து உத்திரவிடப்பட்டது.

| வ.எண் | மனை எண் | மனையின் பரப்பளவு (சதுர அடி) |
|---|---|---|
| 1 | 3 | 295.71 |
| 2 | 4 | 276.38 |
| 3 | 5 | 226.21 |
| 4 | 8 | 125.41 |
| 5 | 9 | 125.41 |
| 6 | 10 | 135.08 |
| 7 | 11 | 197.88 |
| 8 | 12 | 139.35 |
| 9 | 13 | 153.66 |
| | மொத்தம் | 1675.09 |

பார்வை 1 ல் காணும் மனுதாரர் விண்ணப்பத்தில் பார்வை 6ல் காணுமாறு வழங்கப்பட்ட உத்தரவில் மனையின் பரப்பளவானது சதுரமீட்டர் என்பதற்கு பதிலாக சதுரடி என தவறுதலாக உள்ளது. எனவும் இதனை சதுர மீட்டர் என மாற்றம் செய்து தர தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணுமாறு மனையின் பரப்பளவு சதுர மீட்டர் என்பதற்கு பதிலாக சதுர அடி என தவறுதலாக உள்ளதை தற்போது சதுர மீட்டர் என திருத்தம் செய்து கீழ்காணுமாறு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

R. Rajan (தபிபா)

| வ.எண் | மனை எண் | மனையின் பரப்பளவு (சதுர மீட்டர்) |
|---|---|---|
| 1 | 3 | 295.71 |
| 2 | 4 | 276.38 |
| 3 | 5 | 226.21 |
| 4 | 8 | 125.41 |
| 5 | 9 | 125.41 |
| 6 | 10 | 135.08 |
| 7 | 11 | 197.88 |
| 8 | 12 | 139.35 |
| 9 | 13 | 153.66 |
| | மொத்தம் | 1675.09 |

மேலும் மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் வரும் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகளை மீறப்பட்டாலோ இவ்வுத்தரவு உடனடியாக எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
ஓமலூர்.

30/6/21 30/6/202

பெறுதல்

திரு. ராஜாராம்,
129/6A, 11 வது கிராஸ் 2 வது மெயின்ரோடு,
ரெட்டியூர் சிவாய நகர்,
பேர்லேண்ட்ஸ்,
சேலம்.

நகல்.ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) சேலம் அவர்களுக்கு தகவலுக்காக் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்.சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம் ஓமலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

R. Rajan